### <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 288/2013 | சாட்சி | பி.வா.சா.2 |
| பெயர் | தனபால் | நாள் | 08.01.2025 |
| தகப்பனார் பெயர் | மாதையன் | | |

<u>**6 முதல் 8 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.2 ஐ குறுக்கு விசாரணை :-**</u>

1) நீதிமன்றத்தில் சாட்சியம் அளிப்பதற்கு எனக்கு அழைப்பாணை வந்ததா என்றால், இல்லை. இவ்வழக்கின் 1ம் பிரதிவாதி என் தந்தை என்றாலும், 3ம் பிரதிவாதி என் தாயார் என்றாலும், 2, 4, 5 பிரதிவாதிகள் என் சகோதர, சகோதரிகள் என்றாலும், அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க தற்போது நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரிதான். வாதிகள் என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால், எங்களுக்கு சொந்தமான நிலத்தை வாதிகள் தங்களுக்கு சொந்தமானது என கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளனர்.

2) வாதிகள் இவ்வழக்கில் வருவாய் துறையினரான 6 முதல் 8 வரையிலான பிரதிவாதிகளுக்கு எதிராக என்ன பரிகாரம் கோரியுள்ளனர் என்றால், வாதிகள் பெயரில் பட்டா மாறுதல் செய்துகொடுக்கவேண்டும் என பரிகாரம் கோரியுள்ளனர். பொதுவாக வருவாய் துறையினர் ஆவணங்களின் அடிப்படையிலும், அனுபவத்தின் அடிப்படையிலும் தான் பட்டா மாறுதல் உத்தரவுகள் பிறப்பிப்பார்கள் என்றால், சரிதான்.

3) தாவா சொத்துக்களை பொறுத்து வருவாய் ஆவணங்கள் முந்தைய ஆவண பதிவுகள் மற்றும் அனுபவத்தின் அடிப்படையில்தான் ஏற்படுத்தப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகிறது என்றால், சரிதான். வாதிகளுக்கும், எங்களுக்கும் இடையே தாவா சொத்துக்களிலுள்ள கிணறு தொடர்பாக வேறு ஒரு வழக்கு உள்ளது என்றால், சரிதான். தற்போது இவ்வழக்கு எங்களுக்கும், வாதிகளுக்கும் இடையேயுள்ள தனிப்பட்ட சொத்து பிரச்சனையால் ஏற்பட்டது என்றால், சரிதான்.

4) இவ்வழக்கில் 6 முதல் 8 வரையிலான பிரதிவாதிகள் சட்டப்படி செயல்பட்டுள்ளார்கள் என்றாலும், அதனால், மேற்படி பிரதிவாதிகளுக்கு எதிராக எவ்வித பரிகாரமும் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால், சரிதான்.

ஓம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.